
நகர் ஊரமைப்பு துறை - தேனி மாவட்டம்
மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சி/கிராமம், ச.எண்கள்: **328/4A, 328/4B, 328/5A1** மற்றும் **328/5A2**-இல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

(திட்டமில்லாத பகுதி)

கோப்பு எண் : **THENI /4MYVA2NM/2025/TCP**
அளவுத்திட்டம் - 1 : 400



குறிப்புகள்:		
மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	-	4800.00ச.மீ
மனைப்பிரிவு உத்தேச சாலையின் பரப்பளவு மூலை முடக்கு உட்பட	-	1566.03ச.மீ
மீதமுள்ள மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	-	3233.97ச.மீ
மனைப்பிரிவு இடத்தின் எல்லை	-	
நிலையிலுள்ள சாலை	-	
மனைப்பிரிவு உத்தேச சாலை	-	
கோரிய மனைகளின் எண்ணிக்கை	-	26 எண்ணம்

ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை
மனை எண்கள்: 01 முதல் 24 வரை - 24 எண்ணம்

பொது ஒதுக்கீடு(உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டது)

உத்தேச சாலை	1566.03ச.மீ	தான ஆவணம் எண்-4255/2025, நாள்:11.08.2025-ன் மூலம் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.
உள்ளாட்சி உபயோகத்திற்கு	19.07ச.மீ (0.59%)	
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானகழக உபயோகத்திற்கு	17.95ச.மீ (0.56%)	தான ஆவணம் எண்-4256/2025, நாள்:11.08.2025-ன் மூலம் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

பொது ஒதுக்கீடு:
பூங்கா ஒதுக்கீட்டிற்கு பதிலாக மனையின் பரப்பில் 10 சதவீத இடத்திற்கு ஈடான வழிகாட்டு மதிப்பீட்டுத் தொகையினை மனுதாரர் அரசு கணக்கில் செலுத்தியுள்ளார்.

மூலை முடக்கு
12.0மீ வரை உள்ள அகலச்சாலைகளுக்கு 1.50மீ x 1.50மீ விடப்பட வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண்-134 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்-20.09.2002-இன் படி மனுதாரரது நிலஉரிமம் குறித்து சரிபார்ப்பது உள்ளாட்சியின் பொறுப்பாகும்.
2. இம்மனைப்பிரிவு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் (ம) சான்றுகள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது இம்மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதலானது எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை, அவர்களால் ரத்து செய்யப்படும்.
3. உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறையின் மூலம் உட்பிரிவு செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளபடவில்லை என்றும் எந்தத்துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட்டவில்லை என்றும் உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ளப்படல் வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் இன்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டும்.
6. இம்மனைப்பிரிவில் அமையும் சாலையின் போக்கினை தடுக்கும் வகையில் சுற்று சுவர் எழுப்புதல் கூடாது.

குறிப்பு :
அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

L.P/AD DTCP(TD) NO:SWP/ 122 /2025

அளவர்/உதவிவரைவாளர்

Signature valid
Signed by: Assistant Director
Location: Theni
Date: 2025.08.12 21:10:14

Signature valid
Signed by: Executive Officer
Location: Theni
Date: 2025.08.01 19:12:03

வரைவாளர் நிலை-III

மேற்பார்வையாளர்

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
தேனி மாவட்டம்